5th March 1968]

Taxis

*176 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the number of taxis plying in Tamilnad, district-wise ; and

(*b*) the places where taxis fixed with meter are plying ?

தமிழக வாடகை மோட்டார் வண்டிகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் மாவட்ட வாரியாக எத்தனை வாடகை மோட்டார் வண்டிகள் ஓடுகின்றன ?

(இ) மானி (Meter) மாட்டிய வாடகை மோட்டார் வண்டிகள் எங்கெங்கு ஓடுகின்றன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) அவைமுன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, மதுரையிலும், கோவையிலும் இன்னும் 500 வண்டிகளுக்கு மேல் மீட்டர் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கின்றன. இதில் மீட்டர் வைக்கவேண்டுமென்று கிட்டத்திட்ட 6, 7 ஆண்டுகளுக்கு முன்னால் முந்திய அரசாங்கம் ஒரு உத்தரவு போட்டது. அதை இன்று வரை அமுல் செய்யாமல், மீண்டும் மீட்டர் இல்லாமல் டாக்ஸிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதற்கு என்ன காரணம் ? இவர்கள் மீட்டர் வைக்கவேண்டு மென்று உத்தரவு போடப்படுமா ? அவர்களுக்கு மீட்டர் சப்ளை செய்யப் படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, பழைய அரசாங்கம் உத்தரவு போட்டது உண்மைதான். அதை இந்த அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்று நினைக்கத் தேவையில்லை. பழைய அரசாங்கம் மதுரை, திருச்சி, கோவை போன்ற நகரங்களில் மீட்டர் வைக்கவேண்டுமென்று உத்தரவு போட்டதும், வழக்கம்போல் அவர்கள் நீதிமன்றத்திற்கு சென்றார்கள். நீதிமன்றத்தில் இந்த உத்தரவு செல்லாது என்று திருப்பிவிட்ட காரணத்தால் மறுபடியும் பழைய அரசாங்கமே 10—3—1967-ம் தேதியன்று அவர்கள் போட்ட உத்தரவிற்கு திருத்தம் கொண்டு வந்து, இப்போது மீட்டர் வைக்கலாம் என்கிற அளவிற்கு முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. மிக விரைவில் திருச்சி, மதுரை, கோவை போன்ற நகரங்களில் மீட்டர் வைக்கப்படும்.

திரு. எம். எத்திராஜுலு : தலைவரவர்களே, இந்த மூன்று இடங்களையும் தவிர வேறு ஜில்லாக்களில் ஓடுகிற இந்த மோட்டார் கார்களுக்கு மீட்டர் வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ? கிராமத்திலிருப்பவர்கள் டாக்ஸியில் போகும்போது, அதிகமாகப் பணம் கேட்கப்படுகிறார்கள். அதிகமாகப் பணம் கொடுக்க மறுத்தால் வரமுடியாது என்று திட்டவட்டமாக சொல்லிவிடுகிற காரணத்தால், மீட்டர் இருந்தால் பொதுமக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். அதற்கு அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மதுரை, திருச்சி, கோவை போன்ற நகரங்களில் தான் இந்தத் தொந்தரவு இருக்கும். வேறு இடங்களில் உள்ள மக்கள் மீட்டரை விரும்புவதாகத் தெரியவில்லை. மதுரை, கோவை போன்ற நகரங்களில் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒரு இடத்திற்குப் போகவேண்டுமென்றால் சுமாராக 5 ரூபாய், 6 ரூபாய்

[a] Printed as Appendix on page 369.

என்று கேட்கிருர்கள். ஆகவே தான் பொது மக்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் இந்த நகரங்களில் உள்ள வண்டிகளுக்கு மீட்டர் பொருத்தப்படும். எல்லா நகரங்களிலும் அல்ல.

Supermarkets

***177 *Q*.—THIRU N. R. THIAGARAJAN :** Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state the monthly rent for each building where the Supermarkets are now located in Tamilnad ?

சிறப்பங்காடிகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சட்ட–கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழகத்தில் தற்போதுள்ள சூப்பர் மார்க்கெட் அமைந்திருக்கும் கட்டிடங்கள் ஒவ்வொன்றின் மாத வாடகை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் அமைந்திருக்கும் கட்டிடங்களின் மாத வாடகை பின் வருமாறு :—

		ரூ.
(1)	தென் சென்னை காமதேனு சிறப்பு அங்காடி.	26,982
	இரண்டு கிடங்குகள்	2,710
(2)	திருச்சிராப்பள்ளி சிறப்பு அங்காடி	250
(3)	மதுரை சிறப்பு அங்காடி	2,000
	ஒரு கிடங்கு	500
(4)	சேலம் சிறப்பு அங்காடி	2,781
(5)	கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம் ஏற்படுத்தியுள்ள சிறப்பு அங்காடி சொந்தக் கட்டிடத்திலேயே அமைந்துள்ளது. இருப்பினும், சிறப்பு அங்காடியின் வாடகைச் செலவாக மாதந்தோறும் ரூ. 1,500 சங்கக் கணக்கில் கூட்டப்பட்டு வருகிறது.	

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, திருச்சியில் மட்டும் மிகவும் குறைவாக இருக்கக் காரணமென்ன ? மதுரையில் குறைக்கப் பட்டிருப்பதாகச் சொன்ஞர்கள். சென்னையில் மிகவும் அதிகமாக இருக்கிறது. அதைக் குறளகத்திற்கு மாற்றப்போவதாக சொன்ஞர்கள். அந்த உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இரண்டு, மூன்று கேள்விகள் சேர்ந்து கேட்டிருக்கிருர்கள். திருச்சியில் அங்காடியிருக்கும் கட்டிடம் நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடம். அதை அரசாங்கததின் அனுமதியோடு வாடகைக்கு விடப்பட்டிருப்பதால் குறைவாக இருக்கிறது. மதுரையில் இருப்பது அது பாங்கிற்கு, வங்கிக்கு, சொந்தமான கட்டிடம். அதற்கு ஏற்கனவே 5,000 ரூபாயாக இருந்தது. அதற்குப் பின்னுல் சட்டமன்றத்தில் கேள்வி கேட்ட பிறகு அது பற்றி பரிசீலனை